ஆண்டவரின்  இரவு  விருந்து  வியாழன்  -   02.04.2026

முதல் வாசகம் : விப 12:1-8, 11-14
இரண்டாம்  வாசகம் :  1  கொரி 11:23
நற்செய்தி  வாசகம்:  யோவா  13: 1-15

வழிபாடு துவங்குமுன் தியான சிந்தனையோடு தெளிவாக வாசிக்க வேண்டிய பகுதி:

இன்று நாம் இங்கே கூடியியருப்பது ஏனெனில் இயேசுவின் இறப்பிற்கு முந்தின நாளான இன்று இரவில் தான் இயேசு தம் சீடரோடு இரவு விருந்தை உண்டு அதைக் கொண்டாடினார். அதை நினைவுகூரும் பொருட்டே நாம் இங்குக் கூடி வந்துள்ளோம்.

அச்சமயத்தில் எருசலேமில் இருந்த இயேசுவின் சீடர் / நண்பர்கள் தங்கள் ஆண்டவர் மறுநாள் சிலுவை மரணத்தை சந்திப்பார் என்பதையும், அந்த இரவில் தாங்கள் இயேசுவோடு ஒன்றாக அமர்ந்து உண்ணும் உணவே அவரது இறுதி உணவு என்பதையும் அறியாதிருந்தனர். ஆகவே இயேசு அவர்களது பாதங்களைக் கழுவித் துடைத்த போது அவர்கள் திகைப்புற்றதில் ஆச்சரியமேதுமிலர்லை என்பதை நாம் புரிந்துக் கொள்ள முடியும். விருந்தை ஏற்பாடு செய்து அவர்களை அதில் கலந்துக்கொள்ள அழைத்தவரே விருந்தினர்களாக வந்து கலந்துக் கொள்பவர்களின் பாதங்களைக் கழுவுகிறார். அது உண்மையிலேயே ஒரு குறிப்பிடத்தக்க செயலாக உள்ளது.

இந்நாளில் இந்த குறிப்பிட்ட நேரத்தில் உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் ஆண்டவரின் இறுதி இராஉணவை நினைவுக் கூர்ந்திட அவர்களது ஆலயங்களில் கூடி வந்திருக்கின்றனர். நாமும் கூட உலகெங்கும் நினைவுக்கூறப்படும் இந்த நிகழ்வில் பங்கேற்க இங்கே கூடி வந்திருக்கின்றோம்.

எனவே உங்கள் அனைவரையும் இந்த புனித வியாழன் விழாவைக் கொண்டாட அன்போடு அழைக்கிறேன். நாம் இன்றிலிருந்து புனித வெள்ளி, இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா இரவு விழிப்புத் திருப்பலி என்ற தனிச்சிறப்பு மிக்க வழிபாடுகளில் பங்கேற்கவிருக்கிறேம். இந்நாட்களீல் நாம் நமது விசுவாசத்தின் மறைபொருளை பொருளுள்ள முறையில் அனுசரித்து பயன்பெறவும், தனிப்பட்ட நல்ல அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளவும் அழைக்கப்படுகிறோம்.

இப்போது நாம் கடந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக கொண்டாடிவந்துள்ள இந்த பழைய மரபுகளில் நம்மையே மூழ்கடித்து, நமது பண்டைய மக்கள் மீண்டும் மீண்டும் திரும்பக் கண்டடைந்த அதே விசவாசத்தை நாமும் கண்டடைந்துக் கொள்ள இப்போது அழைக்கப்படுகிறோம்.

நம்மை அழைக்கும் இந்த இறைவனோடு நாம் இப்போது ஒன்றித்திருப்போமாக. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு செவிமடுத்து அவரது செயல்களையும் கூர்ந்து நோக்கி நமது மனங்களை ஆண்டவருக்காகத் திறந்து வைப்போம். எனவே இந்த மணித்துளிகள் நமக்கு இயேசுவின் மீதான இறைப்பற்று, நம்பிக்கை , அன்பு ஆகியவை நம் உள்ளங்களில் வளர்ந்திட அது நம்மை உருவாக்குவதாக.

(சற்று நேரம் ஆழ்ந்த அமைதி காக்கப்பட வேண்டும்).

குருவானவர் ஆலயப் பீடத்திற்குள் பீடச்சிறாருடன் நுழைகிறார்:

தந்தை மகன் தூய ஆவியாரின் பெயராலே .......

நம்மை இறுதிவரை அன்பு செய்த இயேசு, இப்போதும் இந்த இரவு விருந்து வழிபாட்டிற்கு நம்மை அழைத்த சிறப்பான அழைப்பை விடுத்துள்ள அவர் நம்மோடு இருப்பாராக.

முன்னுரை 1:

இறப்பின் தறுவாயில் இருக்கும் சிலர் தங்கள் சுயசரிதையைஈ அதன் முக்கிய சில நிகழ்வகளைத் தொகுத்து எழுதி வைப்பது உண்டு. ஏனெனில் அவருக்கப் பின்

வருபவர்கள் அவர்களின் உள்மன விருப்பப்படி எப்படி வாழ வேண்டும் எனபதற்கு வழிகாட்டியாக இருக்கவும் மேலும் தாங்கள் தங்களுக்கு வேண்டியவர்களால் சீக்கிரத்தில் மறக்கப்படாமல் இருப்பதற்காகவும் அதனை எழுதி வைப்பர். சிலர் தங்களுக்குத் தாங்களே நினைவு மண்டபர் கட்டியெழுப்பிக்கொள்வார்கள். ஒரு சிலரின் பெயரால் மற்றவர்களால் அவர்களுக்கு நினைவு மண்டபங்கள் கட்டி எழுப்பப்படும். அதன் வாயிலாக அந்த மனிதர்கள் வாழ்ந்த வாழ்வின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்திக் காட்டுவதாக அவை அமையும். இயேசு தமக்குப் பின்னால் தம்மைக் குறித்து அறிந்துக் கொள்ள நூல் எதையும் எழுதி வைத்துவிட்டுச் செல்லவில்லை அல்லது தமக்காக நினைவு மண்டபம் எழுப்பி வைக்கவில்லை. ஆனால் தமது பிரியாவிடை விருந்தின் போது அவர் தம் சீடருக்கு இரு எளிதான உதாரணங்களை விட்டுச் சென்றார். அவை அவரை நினைவிற் கொள்ளவும், அவர்கள் எப்படி வாழ வேண்டும் என்றத் தங்களை சரிசெய்துக் கொண்டு வாழ்வதற்கு உதவிகரமாக இருக்கவும் அவற்றை விட்டுச் சென்றார். அவர் ஒரு அடிமையைப்போல தமது சீடர்களின் பாதங்களைக் கழுவினார். அவர்களில் ஒருவராக அப்பத்தையும், இரசத்தையும் பகிர்ந்துக் கொண்டார்.

நாமும் இந்த இரு செயல்பாடுகளுடன் அவருடனான நமது நினைவுகளைப் போற்றிப் பாதுகாத்து வருகிறோம். அவை நமக்கு மிக அரிதான அருட்சாதனங்களாக நமது வாழ்வு அவரில் சீராக உருப்பெற இன்றும் அமைந்தள்ளன.

கிறிஸ்துவின் இந்த அன்பு செயல்கான சீடரின் பாதம் கழுவுதல், அப்ப இரசத்தைப் பகிர்ந்துக் கொள்ளுதல் ஆகியவற்றை தியானிக்கும் வேளையில் நாம் எத்தனை சமயங்களில் அவரது வாழ்வுக்கேற்ப வாழத் தவறிவிட்டிருக்கிறோம் என்பதைக் குறித்து ஆய்ந்தறிந்துக் கொள்வோம். அதற்காக நாம் தாழ்ச்சியோடு கடவுளின் பால் திரும்பி அவரது இரக்கத்தையும் மன்னிப்பையும் கேட்போம்.

(அல்லது)

முன்னுரை 2:

இன்றைய நாளின் முக்கியமான இறைவார்த்தைகளை நம் ஆழ்மனத்திலிருத்தி தியானித்து அதை நம் வாழ்வுப் பயணத்தில் கொண்டுச் செல்ல முற்படுவோம். புனித வியாழன் நமக்கு மூன்று முக்கியமான சொற்றொடர்களை நமது வாழ்க்கைப் பயணத்தில் எடுத்துச் செல்ல வழங்குகிறது.

முதல் சொற்றொடர் : ''உங்களுக்கு நினைவிருக்கிறதா?''

புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய மடலில் தான் இராவுணவைக் குறித்த பழமையானக் குறிப்புக் காணப்படுகிறது. அது ''இதை என் நினைவாகச் செய்யுங்கள்'' என்பதாகும். இதன் பொருள் என்னவென்றால் ''என்னை நினைவுகூருங்கள்'' ஆகும். இதன் வழியாக இயேசு நம் வாழ்வில் செய்த அனைத்தையும் நினைவுக்கூற அழைக்கப்படுகிறோம். இதைத்தான் நாம் அன்றாடம் திருப்பலியில் செய்து வருகின்றோம். இதனால் நாம் அவரை நினைவுகூர்கிறோம், அவரைக் குறித்து நினைத்துப் பார்க்கிறோம், நமக்காக அவர் இருக்கிறார் என்பதைக் குறித்து நாம் அவருக்கு நன்றிக் கூருகிறோம். ஜெர்மானிய மொழியில் நினைத்துப் பார்ப்பதும், நன்றிக் கூறுதலும் ஒரே வேரிலிருந்து முளைத்த சொற்களாக உள்ளது. அவரது நினைவானது அவரை மறந்துவிடாதிருக்கும் நிலையிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது. ஏனென்றால் அவரது நினைவு நம் வாழ்வில் எப்போதெல்லாம் செயலாற்றியுள்ளார், தற்போதும் நம் வாழ்வின் எந்த நிலையில் அவரது செயல்பாடு நிகழ்ந்துக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துரைத்துக் கொண்டிருக்கிறது. ''இந்த இயேசு உங்களுக்கு என்னவௌல்லாம் உங்கள் வாழ்வ்லில் செய்துள்ளார் என்பதை நீங்கள் அறிவீர்களா?''.

இரண்டாம் சொற்றொடர்: ''உங்கள் முன்னுதாரணமாக அவரை வைத்துக் கொள்ளுங்கள்''

இயேசு தம் சீடர்களின் பாதங்களைக் கழுவிப்பின் தம் சீடரைப் பார்த்து ''நான் உங்களுக்கு காட்டியுள்ள இந்த முன்னுதாரணத்தை நீங்களும் இதையே உங்கள் வாழ்விலும் செய்யுங்கள்'' என்றார். நம் ஆண்டவர் அன்று செய்தது ஒரு அடிமையின் செயல் அதையே செய்யுமாறு நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார். நம்முடைய நினைவு களையும் செயல்களையும் அவர் தலைகீழாக மாற்றிப் போட்டுவிட்டார். கிறிஸ்து தம்

மக்களாகிய கிறிஸ்துவர்கள் மற்றவரிடமிருந்து வேறுபட்ட மனிதர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார். சடமர்கள் தங்களுள் பெரியவர் யார் என்ற விவாத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது ''உங்களுள் இப்படி நீங்கள் இருத்தலாகாது'' என்கிறார். எனவே நமது முன்னுதாரணமாக இயேசுவையே ஏற்றுக் கொள்வோம். அவரது தாழ்ச்சியை, அவரது அன்பை, அவரது இதயத்தின் விருப்பங்களைப் பின்பற்றி நாம் நம்மை உருவாக்கிக் கொள்ள, அல்லது அவர் நம்மை உருவாக்கிட இடமளிப்போம்.

மூன்றாம் சொற்றொடர் : ''அதை அனுமதியுங்கள்''

இராவுணவின் போது பேதுரு தமது பாதங்கள் கழுவப்பட இயேசுவை அனுமதிக்க வில்லை. இயேசு அவருக்கு மறுமொழியாக ''நான் உன் காலடிகளைக் கழவாவிட்டால் உனக்கு என்னோடு பங்கில்லை'' என்றார். நம் வாழ்வில் ஆண்டவரின் நெருக்கம், அவரது அன்பு நமக்குக் கிடைப்பது எவ்வளவு இலகுவானது? பேதுரு இயேசு தன் முன்னே மண்டியிட்டு தன் பாதங்களை கழுவ உடனே அனுமதித்திருக்க வேண்டும். அதை அவர் அனுமதித்தால் தான் அவர் என்ன செய்கிறார் என்பதன் பொருள் பேதுருவுக்கு விளங்கும். இத்தகைய திறந்த மனமும், ஏற்றுக் கொள்ளும் தன்மையும் தான் நம் வாழ்வில் இறைவனின் செயல்களை இன்னும் ஆழமாகப் புரிந்துக் கொள்ளச் செய்யும்.

எனவே நாம் கிறிஸ்துவை நினைவிலிருத்தி, அவரைப் பின்பற்றி, அவரை நம் வாழ்வில் செலாற்ற அனுமதிக்கும் போது தான் நாம் நமதுக் குறைபாடுகளை அறிந்துக் கொள்ள முடியும். அவரைத் திறந்த அனத்துடன் அணுகிச் செல்ல முடியும், இதனால் அவரது இரக்கத்தைப் பெற்றுக் கொள்ள நாம் நம்மை தயாரித்துக் கொள்ளவும், அவரது பணியில் நாம் நம்மைப் புதுப்பித்துக் கொள்ளவும் முடியும்.

மறையுரை 1 - அன்பு, பணிக்கான வழிகள்:

மறையுரைக்கான துவக்கக்கதை 1:

ஒர பரபரப்பான நகருக்குள் ஒரு வழிப்போக்கர் நுழைந்தார். அங்கு அவர் ஒரு முதியவர் ஒரு பிச்சைக்காரர் முன் மண்டியிட்டு அவரது பாதங்களைக் கழுவிக்கொண்டிருந்தார். அதைக் கண்ட வழிப்போக்கர் ஆவல் மிகுதியால் அவர் ஏன் அந்தப் பெரியவர் தனக்கு முன்பின் தெரியாத ஒருவருக்கு அவ்வாறு செய்துக் கொண்டிருக்கிறார் என்றுக் கேடட்டார். அதற்கு அந்த முதியவர் தன்னிடம் கேள்விக் கேட்டவரை நிமிர்ந்துப் பார்த்து '' இவ்வாறு நான் பிறருக்கு பணிசெய்வதன் வாயிலாக நான் எவ்வாறெல்லாம் அன்பு செய்திருப்பேன் என்று அறிந்துக் கொண்டு நானும் அன்பு செய்யக் கற்றுக் கொள்கிறேன்'' என்றார். அன்று அங்கு நிகழ்த்தப்பட்ட காட்சி எளிமையானதாக இருந்தாலும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக பெரிய வியாழனன்று மாடியறையில் இயேசு செய்த செயலை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக உள்ளது அல்லவா?

மறையுரைக்கான துவக்கக்கதை 2:

ஒரு சிறுவன் தினமும் சாயந்திர வேளைகளில் அவனது பாட்டி அவன் வீட்டில் உள்ள அனைத்துப் பாத்திரங்களையும் பொறுமையோடும், அமைதியாகவும் துலக்கி வைப்பாதை பார்த்துக் கொண்டிருந்தான். ஒருநாள் அவன் தன் பாட்டியிடம் ''பாட்டி நீங்கள் ஏன் தினமும் இந்தக் கடினமான வேலையை எங்கள் வீட்டில் செய்துக் கொண்டிருக் கிறீர்கள்?'' என்றுக் கேட்டான். அதற்கு பாட்டி புன்னகைத்தவாரே '' அன்பு என்பது பெரிய காரியங்களை செய்வதில் தான் அடங்கியிருக்கிறது என்று இல்லை. மாறாக எதை செய்தாலும் யாரும் பாராத வேளையிலும் முழுமனத்தோடு செய்யப்படும்' சிறிய செயல்களும் அன்பீன் வெளிப்பாடுகளே'' என்று பதிலளித்தார்.

மைய தியான சிந்தனை --

பெரிய வியாழன் மாலையில் இயேசு தம் சீடருடன் இணைந்து அவர்களுடன் தம் உணவைப் பகிர்ந்துக் கொண்டார். அந்த உணவுப் பகிர்வு. பகிர்வு நமது ஒட்டுமொத்த திருஅவையின் வாழ்வியல் அமைப்பையும் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு மு ழுமையாக மாற்றியமைத்து விட்டது. மற்ற நற்செய்திகள் அவர் அப்பத்தை எடுத்ததை, இரசத்தை எடுத்ததைக் குறிப்பிடும்போது யோவான் நற்செய்தியில் மட்டும் அவர் தம்

சீடரின் பாதங்களைக் கழுவிய நிகழ்வை பதிவிடுகிறது. அவர் எழுந்துத் தம் மேலுடையைக் கழற்றி வைத்து விட்டு ஒரு துண்டை எடுத்துத் தம் இடுப்பில் கட்டிக் கொண்டார். அதன் பின்னர் தம் நண்பர் ஒவ்வொருவர் முன்பாக முழந்தாள் படியிட்டார். அவர்களின் தூசுப்படிந்த நீண்ட தூரம் நடைபயின்றப் பாதங்கள், பல சமயங்களில் அவரிடமுள்ள நம்பிக்கையை தளரவிட்ட, அதை வெளிப்படுத்தத் தயங்கியப் பாதங்களையும் கழுவலானார்.

இயேசு பேதுருவின் பாதங்களைக் கழுவ வந்த போது அவர் அதை எதிர்த்தார் ''ஆண்டவரே நீர் என் பாதங்களை ஒருபோதும் கழுவக் கூடாது'' என்றார். ஆனால் இயேசு அவருக்கு மறுமொழியாக '' நான் பாதங்களைக் கழுவாவிடில் உனக்கு என்னோடு பங்கில்லை'' என்றார். இயேசுவோடு தோழமையில் இருப்பது என்றால் வெறுமனே அவருடன் உடனிருப்பதோ அல்லது மற்றவர் பார்க்கும் நிலையில் அவரைப் பின்பற்றுவது என்று ஆகிவிடாது. இயேசுவோடு தோழமை உறவில் இருப்பது என்பது அவர் நம் இதயத்திற்குள் வந்து அதை முற்றிலுமாக மாற்றம் செய்ய அவரை அனுமதிப்பது. நம்மிடமுள்ள பாவங்கள் தற்பெருமைகள் ஆகியவற்றை அவர் முற்றிலுமாகக் கழுவித் துடைத்து, நாம் அவரது அன்பில் எந்நாளும் வாழ்ந்நிருப்பதற்கு நம்மை நாமே தயாரித்துக் கொள்வது.

அன்பு எப்போதும் செயல்படாமல் இருப்பதில்லை. இயேசுவின் அன்பானது மனிதர் முன் மண்டியிடும். தன்னையேத் தாழ்த்திக்கொள்ளும், அவரது தொடுதல் எங்கே மிகவும் அவசிமாகத் தேவையோ அங்கே அது நிச்சயம் செயவ்படும். இயேசுத் தம்மை அதிகமாக அன்பு செய்த திருத்தூதர் யோவானின் பாதங்களை மட்டும் கழுவவில்லை தம்மைக் காட்டிக்கொடுத்து துரோகியாக மாறவிருக்கும் யூதாசின் பாதங்களையும் கழுவினார். அன்பு எதையம் தனித்து விடுவதோ, புறந்தள்ளுவதோ கிடையாது. அது இருளடைந்த பகுதிகளையும், யாரும் தொட விரும்பாத பகுதிகளையும் தொடாமல் விடுவதில்லை.

நிகழ்வுகள்

1. இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவுக்கு முன் நான் ஒரு மருத்துவ மனையை சந்திக்கச் சென்றேன். அங்கே சில தன்னார்வத் தொண்டர்கள் லயதான நோயாளிகள் சிலரின் பாதங்கைக் கழுவிக்கொண்டிருந்தார்கள். சில முதியவர்கள் அதில் கலந்துக் கொள்ளத் தயங்கினார்கள். சிலர் பெருமிதமும், சிலர் அவமானப்பட்டுக் கொண்டும் அதில் கலந்துக் கொண்டனர். ஆனால் நிகழ்வு முடிந்ததும் கலந்துக் கொண்ட அனைவரின் முகங்களிலும் நன்றிக் கலந்தப் புன்னகை ஒளிர்ந்தது. அன்போடு செய்யப்படும் எளிய செயல்கள் கூட இதயங்களை உயர்த்துகின்றன. அவை மனித மாண்பை நிலைநாட்டுகின்றன, அப்படிப்பட்ட நிகழ்வுகள் அன்று பெரிய வியாழனன்று இயேசு தம் சீடருக்கு செய்துக் காட்டி செயல்பாடுகளுடனான அன்பின் பொருளை உணர்த்திய நிகழ்வை எதிரொலிக்கிறது.

2. சரியாகப் படிக்கவே வராத ஒரு சிறுவனுக்கு அதைக் கற்பிப்பதற்கு அவனது ஆசிரியர் மணிக்கணக்காக செலவழித்து வந்தார். ஆனால் அந்த மாணவனோ பொறுமை இழந்தவனாகவும், சலிப்படைந்தும் போனான். ஆனாலும் ஆசிரியரின் பொறுமையால் அந்த மாணவன் வெற்றிப் பெற்றான். இறுதியில் அவன் தன் ஆசிரியரிடம் '' வேறு எவரும் என்னை நம்பாது இருந்த போதும் நீர் என் மீது நம்பிக்கை வைத்தீர். அன்போடுக் கூடிய அந்த ஆசிரியரின் சேவை இயேசுவின் முன்னுதாணத்தை பிரதிபலிக்கிறது. மற்றவரை உயர்த்துவதற்கு தாழ்ச்சி, பொறுமை, விடாமுயற்சித் தேவைப்பட்டாலும் அதை பயன்படுத்தி செய்யும் போது அது மற்றவரை உயர்த்துகிறது. நம் அன்றாட வாழ்விலும் நாம் செய்யும் செயல்கள் சிறியவைகளாக, எளிமையானவைகளாக அதாவது நம்முடன் பணியாற்றுவோருக்கு நாம் கூறும் ஒரு சில ஆறுதலான வார்த்தைகள், படிக்கத் தெரியாத ஒரு பிள்ளையைப் படிக்க வைக்க நாம் மேற்கொள்ளும் பொறமையுடனான முயற்சிகள், தான் மறக்கடிக்கப்பட்டதாகக் கருதி தனிமையில் வாடும் நபரோடு நாம் செலவழிக்கும் சில மணித்துளிகள் ஆகியவை அனைத்தும் அன்பின் வெளிப்பாட்டு செயல்களே. இத்தகைய சிறு செயல்களும் இயேசவின் அன்பையே பிரதிபலிக்கின்றன. அது உறவுகளை மாற்றம் பெறச் செய்து நல்லதொரு தோழமையை உறவை ஏற்படுத்துகிறது.

அன்பு செயல்களுக்கும் நற்கருணைக்குமுள்ள தொடர்பு:

இந்தக் கொள்கையை அடித்தளமாகக் கொண்டு அன்பின் வழிந்தேடலாக உள்ளதே நற்கருணையும். அப்ப இரச வடிவங்களில் இயேசு தம்மையே நமக்கு உணவாக வழங்குகிறார். ஒவ்வொரு முறையும் நற்கருணை உட்கொள்ளும் போதும் நாம் அன்றைய மாடியறை அனுபவத்தைப் பெறுகிறோம். நற்கருணை உட்கொள்ளும் போது நமக்காக நம் முன் மண்டியிடும், பணிந்துப் பணிபுரியும், நம்மை முற்றிலுமாக மாற்றியமைக்கும் ஒரு அன்பின் பிரவாகத்தை நாம் காண்கிறோம், அனுபவிக்கிறோம். நற்கருணை உட்கொள்ளுதல் நம் ஆன்மீக ஊட்டத்திற்கான உணவாக மட்டுமல்ல அதே அன்பை நாம் பிறருடன் பகிர்ந்துக் கொள்ள நம்மை வழியனுப்பும் ஒரு உணவு. நாம் முழுமையன உ்ள்ளன்போடு செய்யும் ஒவ்வொரு அன்புச் செயலும் ஒரு திருப்பலியாக விளங்குகிறது.

நிறைவாக ஒரு கதை:

முன்னொரு காலத்தில் ஒரு ஆசிரியர் ஒரு வாளி நிறைய தண்ணீர் கொண்டு வந்துத் தன் மாணாக்கர்களின் பாதங்களைக் கழுவினார். நிகழ்வின் தொடக்கத்தில் மாணவர்கள் அதை கிண்டல் செய்து சிரித்தனர், ஏற்க விரும்பாததால அதை அவர்கள் அனுமதிக்க மறுத்தனர். ஆனால் அவர்கள் இறுதியில் ஒரு அருமையானப் பாடத்தைக் கற்றுக் கொண்டனர். அன்பு என்பது பெரிய பிரமாதமான செயல்கள் செய்வதில், அல்லது பெரிய சாதனைகளைப் புரிவதில் தான் அட்ங்கியிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல மாறாக தள்ளையே குறுக்கிக் கொண்டு தாழ்ச்சியோடு மற்றவர் முன் குனிந்து பணிந்து எவ்வித எதிர்ப்பார்ப்புமின்றி சேவைப் புரிவதில் தன்னையே முழுவதுமாக அளிப்பதில் அடங்கியிருக்கிறது. புனித வியாழன் நமக்குக் கற்பிக்கும் பாடமும் இதுவே. அதுவே இயேசுவின் வழி : அன்பு அது மற்றயவர் முன்னும் தாழ்ந்து மண்டியிடச் செய்யும், அன்பு தான் அன்பு செய்பவரை முற்றிலும் மாற்ற வல்லது - அன்பு அது எந்நாளும் நினைத்து நீடித்திருப்பது - ஆமென்.

மறையுரை 2 - நிலை வாழ்விற்கான இரத்தத்தினாலான உடன்படிக்கை

துவக்க கதை 1

முற்காலத்தில் நாடோடி இன மக்களிடையே உடன்படிக்கைக்கான ஒரு பழக்கம் நிலவியது. அவர்கள் தங்களையே வெட்டிக் காயப்படுத்திக் கொண்டு அதிலிருந்து வழிந்தோடும் இரத்தத்தை ஒன்றாகக் கலந்து " நான் எப்போதும் உன்னோடிருப்பேன். ஆபத்தானக் காலங்களிலும் உன்னுடனிருப்பேன்" என்ற வாக்கினை முத்திரையிட்டுக் கொள்வார்கள். இந்தப பழங்கால சடங்கு மிக ஆழமனக் கருத்தியலைக் கொண்டுள்ளது. அதாவது தங்கள் வாழ்வை நீதியோடும் விசுவாசத்துடனும் அர்ப்பணித்துக் கொள்வது. இதைவிட மிகப் பெரியதொரு அர்ப்பணிப்பை இயேசு புனித வியாழனன்று தமது இரத்தத்தினாலான உடன்படிக்கையாக செய்துக் காட்டினார் .

துவக்க கதை 2

ஒரு முறை ஒரு மனிதர் போர்க்களத்தில் படை வீரர் ஒருவரின் செயல் குறித்து பகிர்ந்துக் கொண்டார். -- ஒரு போர்வீரர் ஒருநாள் போர்க்களத்தில் முன்பின் தெரியாத ஒரு நபரைத் தன் உயிரைப் பணயம் வைத்துக் காப்பற்றினார். அதைக் குறித்து அவர் " சக மனிதரின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு பகிர்ந்துக் கொள்ள முன்வராத இரத்தம் ஒன்றுக்கும் பயனற்றது" என்றாராம். அந்தப் போர்வீரரின் துணிவு இயேசு நம்மைக் காப்பாற்றுவதற்காக தமது இரத்தத்தை சிந்தி நம்மை மீட்டதை பிரதிபலிக்கிறது. இயேசு செய்துள்ள இந்த உடன்படிக்கை என்றும் உடைபடாத ஒரு உடன்படிக்கையாக உள்ளது.

மையமான சிந்தனை:

புனித வியாழனன்று இயேசு மாடியறையில் அப்பத்தையும் இரசத்தையும் எடுத்து "இது என் உடல். இது என் இரத்தம். இது உங் களுக்காகவும் பலருக்காகவும் சிந்தப்படும் புதிய நித்திய உடன்படிக்கையினாலான என் இரத்தம்" என்றார். பல நூற்றாண்டு களுக்கு முன் இஸ்ரயேல் மக்கள் தாங்கள் பலியிட்ட ஆட்டுக் குட்டியின் இரத்தத்தைத்

தங்கள் வீடுகளின் நிலை வாயில் படிகளில் தெளித்து வைத்தனர். அது அவர்களுக்கு கடவுள் அவரைக் காப்பாற்றுவார் என்பதன் அடையாளமாக இருந்தது. இப்போது இயேசு தம்மையே வழங்குகிறார். தம் உடலையும். இரத்தத்தையும் நமது மீட்பிற்கான அடையாளமாக வழங்குகிறார். அவரது இரத்தம் நமக்கு வலிமையளிக்கிறது, நம்மை இறைவனோடு ஒன்றிணைக்கிறது. அந்த இணைப்பானது எத்தகைய அச்சங்களையும், துரோகங்களையும் விட மிகவும் வலிமை மிக்கது.

ஆயினும் அச்சம் அன்றைய இரவில் அங்கே இருந்தது. துரோகம் பக்கத்திலேயே நின்றிருந்தது. பேதுரு இயேசுவை மறுதலிப்பார். யூதாஸ் அவரை விட்டு விலகி விடுவான். அன்பு மனித பலகீனத்திற்கு முன் பெரும் சவாலாக உள்ளது. ஆனால் இயேசு தம் வழியில் முன்னேறிச் செல்கிறார். அவர் மனிதர் முன் மண்டியிடுகிறார். சீடரின் பாதங்களைக் கழுவுகிறார். அவர் தம்மையே வழங்குகிறார். அன்று இரவில் பயம் அல்ல மாறாக கிறிஸ்துவின் அன்பே அதை பொருளுள்ளதாக்குகிறது.

நிகழ்வுகள்:

1. அவசர சிகிச்சைப் பிரிவில் வேதனையோடும் நிச்சயமற்ற மனநிலையோடும் போராடிக் கொண்டிருக்கும் ஒரு நபரின் கரங்களைப் பற்றிக் கொண்டு ஆறுதலையளிக்கும் ஒரு செவிலியரை நாம் நினைவிற்குக் கொண்டு வருவோம். அதே போன்று படிப்பில் பீன் தங்கியுள்ள ஒரு மாணவனுடன் இருந்து அவனுக்கு பொறுமையோடு உற்சாகப்படுத்தி அவனைப் படிக்க வைக்கப் பாடுபடும் ஒரு ஆசிரியரையும் நினைவில் கொண்டு வருவோம். இந்த இருவரின் செயவ்களும் சிறியவைகளாக இருப்பினும் அவை அன்பினால் ஆற்றப்ட்ட செலயல்களாதலால் அவை மனித மனங்களில் அவர்களில் உள்ள பயங்களையும், அவநம்பிக்கைகயையம் மேற்கொள்ளவும், அவர்களுக்கு நம்பிக்கையையும், விடுதலை உணர்வையும் ஏற்படுத்தின. இதே விதமான விடுதலையை கிறிஸ்து தமது உடல் உதிரத்தின் வாயிலாக நமக்கு வழங்கினார்

2. ஒரு இளம் வயதுப் பெண் தனிமையிலும் பயத்திலும் வாழ்ந்துக் கொண்டிருந்த தன் அண்டை வீட்டில் வாழ்ந்துக் கொண்டிருந்த ஒரு முதியவருடன் இரவில் தங்கியிருந்து அவருக்குத் தன் உடனிருப்பை அளித்து அவருடன் உரையாடிக் கொண்டும் இருந்தார். அந்த முதியவர் ''நான் அந்த இரவில் என் தனிமையையும் பயத்தையும் பேற்கொள்ள அந்த இரவில் எனக்கு துணிவை அளித்தீர்கள்'' என்று பகிர்ந்துக் கொண்டார். இந்த நிகழ்வானது புனித லியாழன் அன்று வழங்கபட்ட வாக்குறுதியை நமக்கு நினைவூட்டு கிறது. அன்பு நம் பயங்களுக்குள் நுழைந்து நம்மை அவற்றை மேற்கொள்ளவும் நம்மை மாற்றி பழைய நிலைக்குத் திரும்பவும் செய்கிறது.

இன்றும் நம் பயங்களில் மத்தியில் இயேசுவின் உடன்படிக்கை நிலைத்து நிற்கிறது. இயேசுவை மறுதலித்தப்பின் பேதுரு மனம் கசிந்து அழுதார்..இயேசு அவரைக் கைவிடவில்லை. யூதாஸ் இயேசுவை விட்டுப் பிரிந்துச் சென்றாலும் இயேசு அவருக்கு வழங்கிய நற்கருணை அவரில் இருந்தது. பாவத்தினிமித்தம் அன்பு ஒருபோதும் விலகுவதில்லை மாறாக அது தேடி வருகிறது, அழைப்பு விடுக்கிறது குணப்படுத்துகிறது. இதுவே கிறிஸ்து நமக்கு வாக்களித்துள்ள பாதுகாப்பு, அவரோ:டு நம்மை ஒப்புரவு வாழ்வு ஆகியவையாகும்.

இயேசுவின் திரு இரத்தம், நற்கருணை ஆகியவற்றின் வல்லமை:

கிஜிஸ்துவின் இரத்தம் என்பது வெறும் அடையாளச் சின்னமல்ல. அது நமது வாழ்வையே முற்றிலும் மாற்றியமைக்கவுள்ள உண்மையான இயேசுவின் இரத்தமே. அது பழைய ஏற்பாட்டில் பலியாக அர்ப்பணிக்கப்பட்ட பாஸ்கா ஆட்டினால் சிந்தப்பட்ட இரத்தத்தை நினைவுப்படுத்துகிறது. தற்போது அது இயேசு கிறிஸ்துவாகிய ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினால் முழுமையாக்கப்படுகிறது. ஒவ்வொருத் திருப்பலியிலும் இந்த உடன்படிக்கையின்பால் ஈர்க்கப்பகிறோம். இயேசுவின் திருவுடல் நமக்கு ஊட்டமளிக் கிறது அவரது திரு இரத்தம் நமக்குப் பாதுகாப்பளிக்கிறது. இவையிரண்டால் நாம் நம் வாழ்வில் சந்திக்கும் பயங்கள், துரோகங்கள், சவால்களை சந்திக்கும் வலிமைபெறுகிறோம்.

முடிவுரைக்கான கதை:

ஒரு குக்கிராமத்தில் ஒவ்வொரு ஆண்டும் அந்த கிராமத்து மக்கள் ஒன்றக் கூடி தாங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்று அடிமை நாட்டிலிருந்துப் புறப்பட்ட தினத்தை நினைவுக்கூரும் வண்ணம் கொண்டாடுவது வழக்கம். அப்போது அவர்கள் தாங்கள் கெண்டு வந்த அப்பத்தையும் இரசத்தையும் அங்குள்ள மேசையின் மீது வைப்பர். அப்போது கூட்டத்தில் உள்ள முதியவர் அனைவரிடமும் ''முற்காலத்தில் நம் மூதாதையர்களை அவர்கள் பலியிமட்ட ஆட்டின் இரத்தம் காப்பாற்றியது. இப்போதோ கிறிஸ்துவின் இரத்தம் நம்மைக் காப்பாற்றுகிறது. அவர் நமக்காகவென எப்படி வாழ்ந்தாரோ அவ்வாறே நாமும் ஒருவர் மற்றவருக்காக வாழ்வோம்'' என்பார். நாம் கொண்டாடும் புனித வியாழன் நமக்கு வியாழன் அளிக்கும் வாக்குறுதியும் வாழ்வு, விடுதலை, பாதுகாப்பு ஆகியவையே. இவையே கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தத்தால் முத்திரையிடப்பட்டு நமக்கு இலவசமாக வழங்கப்பட்டு திறந்த இதயத்துடன் ஏற்றுக் கொள்வோரால் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

மற்றொரு நிறைவு சடங்கிற்கான சிந்தனை:

அந்த கிராமத்து மக்களைப் போன்று இன்று நாமும் நம்பிக்கையோடு முன்வர அழைக்கப்படுகிறோம். இயேசுவின் திருஇரத்தத்தால் செய்துக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை என்றோ செய்து முடித்துக் கொள்ளப்ப்ட்டதல்ல. அது இப்போதும் செயலர்றும் உடன்படிக்கை. அது நம்மை முற்றிலும் நம்மை மாற்றவல்லது. நமது திருப்பலிகள் வழியாக. நாம் அன்புடன் செய்யும் பிறரன்புப் பணிகளின் மூலமாக கிறிஸ்துவின் உடன்படிக்கை நமது வாழ்வில் பாய்ந்தோடுகிறது. அது நம்மைப் பாதுகாக்கிறது, நமக்கு அழைப்பு விடுக்கிறது, நமது வாழ்வில் நாம் சந்திக்கும் அச்சங்களையும், துரோகங்கரளயும் துணிவுடனும், நம்பிக்கையுடனும் எதிர்கொள்ளச் செய்கிறது - ஆமென். .